# மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001

## மாணவர் ஆக்க நலவியல் பயிற்சி

நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 'மாணவர்' ஆக்க நலவியல்' சார்ந்த கருத்தில் 10.02.2025 அன்று நிறுவனத்தில் 27 ஆசிரியர்களுக்குப் பயிற்சிக் கொடுக்கப்பட்டது.

நாட்டின் வளர்ச்சி மாணவர்களின் ஆக்க நலனால் தீர்மானிக்கப்படுகிறது. மாணவர்களின் முன்னேற்றம் ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற கருத்தாக்கங்களின் அடிப்படையில் 'மாணவர் ஆக்க நலவியல்' சார்ந்த பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்கள் கூறினார்.

ஆசிரியர்கள், மாணவர்களின் உடல் நலன் மற்றும் மனநலனில் அக்கறைச் செலுத்துதல் ; வாசித்தல், கற்றலுக்கு வழிகாட்டல் ; மாணவர்களின் அறிவு வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி ; அழகுணர்வு, உடல் – உள மேம்பாடு வளர்ச்சிக்கான செயல்பாடுகளை மேற்கொள்ளல் ; உயர்படிப்புகளுக்கு ஆலோசனைகள் தருதல் ; தனிப்பட்ட ஆளுமை, குழு ஆளுமை மற்றும் சமூக ஆளுமை வளர்ச்சிக்கு உதவிடுதல் போன்றவைகளில் மாணவர்களுக்கு உதவுதலே 'மாணவர் ஆக்க நலவியல்' எனப்படும்.

இப்பயிற்சிக்காக 'மாணவர் ஆக்க நலவியல்' எனும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் முதல் நூலை நிறுவன அடிப்படையாகக் கொண்டது. மாவட்ட மாதிரிப் பள்ளிகளின் முக்கியத்துவம், பள்ளி மாணவர்களுக்கான கல்வி ஊக்கத்தொகைகள், மாணவர் நலன் சார்ந்த அரசின் திட்டங்களான 'நான் முதல்வன்', புதுமைப்பெண், மாணவர் நலனில் சார்ந்து இயங்கும் அரசுப்பள்ளி ஆசிரியர்களின் முன்னெடுப்புகள், சத்துணவின் முக்கியத்துவம், பள்ளி காய்கறித் தோட்டத்தின் பயன்பாடு, வாசிப்பு இயக்கங்களின் தேவைகள், மரத்தடி நூலகம், குழு வாசிப்புத் திட்டத்தை முனைப்போடு செயல்படுத்தும் அரசுப்பள்ளிகள், நம்பிக்கைக்குரிய அறிவுரை வழங்குதல், கல்வி ஆலோசனை வழங்குதல், படிப்பிற்கான திறன் வளர்த்தல், மாணவர் – சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள், பணி வளர்ச்சிக்கான ஆதரவு, 'சேந்தை சூப்பர் 25' திட்டம், கல்வி ஊக்கத்தொகை வழங்கும் தனியார் அமைப்புகள் போன்ற கருத்துக்களில் நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்களால் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியின்போது பங்கேற்பாளர்கள் பயன்பெறும் வகையில் சின்னமுதலைப்பட்டி, மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் செயல்படுத்தபட்டுவரும் கல்வி விளையாட்டு ஆய்வகம், தொட்டிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள அடர்வனத்தைப் பற்றியும் புரிந்துகொள்ள 'கல்வி அனுபவ உலா' ஏற்பாடு செய்யப்பட்டது.

பயிற்சியில் மாணவர் ஆக்க நலவியல் சார்ந்த தொடர்ச்சியான செலவில்லாமல் சிறுசிறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பெற 'கெய்சன் தர வட்டக்குழு' என்ற செயல்பாடு வழங்கப்பட்டது.

பயிற்சியின் தொடர்பணியாகப் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் மாணவர் ஆக்க நலம் சார்ந்து அவர்களுடையப் பள்ளிகளில் முன்னெடுப்புகளை எடுப்பார்கள். அதன் விளைவுகளையும், தாக்கங்களையும் ஓரிரு மாதங்களில் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்க வழிகாட்டப்பட்டுள்ளது.

இப்பயிற்சியின் விளைவாக நாமக்கல் மாவட்டத்தில் தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் ஆக்க நலம் சார்ந்த முன்னெடுப்புகள், புதுமையானத் திட்டங்கள், மாணவர்களின் தேவையை நிறைவேற்றும் செயல்பாடுகளில் ஆசிரியர்களின் தன்னார்வ முயற்சிகள் நடைபெறும். இதனால் ஏராளமான எண்ணிக்கையில் மாணவர்கள் நேரிடையாகப் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களின் நலம் சார்ந்த குறிக்கோள் பணிகள், மாணவர் சமுதாயத்தின் தேவைக்கானச் செயல்பாடுகளை ஆசிரியர்கள் தன்னார்வ நடவடிக்கையாக மேற்கொள்ளும்போது உலகை மேம்படுத்தும் பள்ளிகளும், உலகை மாற்றும் மாணவர்களும் உருவாகும் வாய்ப்பு ஏற்படும் என நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் கூறினார்.